RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 280 | அக்டோபர்.11 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## 'மனநல ஆரோக்கியமே ஒட்டுமொத்த நல்வாழ்வின் அடிப்படை' : பிரதமர் மோடி



புதுடெல்லி: அக்.11-

மனநலம் ஆரோக்கியம்தான் நமது ஒட்டுமொத்த நலவாழ்வின் அடிப்படையானது என்று தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, உலக மனநல தினத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

உலக மனநல தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், ' மனநல ஆரோக்கியம் நமது ஒட்டுமொத்த நல்வாழ்வின் அடிப்படையான பகுதியாகும் என்பதை உலக மனநல தினம் நமக்கு நினைவூட்டுகிறது. வேகமான உலகில், இந்த நாள் மற்றவர்களிடம் கருணையை வெளிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை நமக்கு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மனநலம் பற்றிய உரையாடல்கள் மிகவும் பிரதான நீரோட்டமாக மாறும் சூழல்களை உருவாக்க நாம் கூட்டாக உழைப்போம். இந்தத் துறையில் பணியாற்றி மற்றவர்கள் குணமடைந்து மகிழ்ச்சியைக் காண உதவுபவர்களுக்கு எனது பாராட்டுக்கள்' என்று தெரிவித்துள்ளார்.

அக்டோபர் 10 ஆம் தேதி ஆண்டுதோறும் உலக மனநல தினமாக அனுசரிக்கப்படுகிறது. உலக மனநல கூட்டமைப்பின் (WFMH) முன்முயற்சியால் 1992 ஆம் ஆண்டு முதல் உலக சுகாதார அமைப்பினால் உலக மனநல தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.63 பெத்தானியாபுரம் பகுதியில் புதிய உபகழிவுநீரேற்று நிலையம் அமைப்பதற்கான பூமி பூஜை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை அக்.16, 18 தேதிகளில் தொடங்க வாய்ப்பு

சென்னை: அக்.11-

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை அக்.16, 18 தேதிகளில் தொடங்க வாய்ப்புள்ளதாகவும், நாளை (அக்.11ம் தேதி) கோவை, நீலகிரி, திருப்பூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ''தென்மேற்கு பருவமழை வரும் அக்.16 முதல் அக்.18ம் தேதிகளில் இந்திய பகுதிகளில் இருந்து விலகுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.

அதே சமயம், வளிமண்டல கீழடுக்குகளில் கிழக்கு மற்றும் வடகிழக்கு திசை காற்று வீசக்கூடிய நிலையில் தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வடகிழக்கு பருவமழை அக்.16 முதல் 18 தேதிகளில் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

வட தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. வடக்கு ஆந்திரா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (அக்.11ம் தேதி) பெரும்பாலான இடங்களிலும், அக்.12 முதல் 16ம் தேதி வரை ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை (அக்.11ம் தேதி) நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கோவை மாவட்ட மலைப்பகுதிகள், திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, தருமபுரி, சேலம், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

அக்.12ம் தேதியில் கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் தென்காசி மாவட்டங்களிலும், அக்.13ம் தேதி கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (அக்.11ம் தேதி) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் நாளை (அக்.11ம் தேதி) சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ராணிப்பேட்டை மாவட்டம் பாலாறு அணைக்கட்டு, ஆற்காடில் தலா 12 செ.மீ மழை, திருவண்ணாமலை மாவட்டம் செங்கம், கள்ளக்குறிச்சி மாவட்டம் கடவனூரில் தலா 11 செ.மீ மழை, திருவண்ணா மலை மாவட்டம் தண்டராம்பட்டு, ஆரணி, கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம், ராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம், ராணிப்பேட்டையில் தலா 9 செ.மீ மழை, விழுப்புரம் மாவட்டம் செம்மேடு, ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா, கரூர் மாவட்டம் ஆனைப்பாளையம், ஈரோடு மாவட்டம் குண்டேரிப் பள்ளம், கரூர் பரமத்தி ஆகிய இடங்களில் தலா 8 செ.மீ மழை பதிவாகியுள்ளது'' என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அதிமுகவின் 54ம் ஆண்டு தொடக்கவிழா: அக்.17, 18ம் தேதிகளில் பொதுக்கூட்டங்கள்



சென்னை: அக்.11-

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: மாபெரும் மக்கள் பேரியக்கமாம் அதிமுக, அக்.17ம் தேதி 54ம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு, அக்.17, 18ம் தேதிகளில், கட்சி அமைப்புரீதியாக செயல்பட்டு வரும் 82 மாவட்டங்களிலும்; புதுச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன.

அதற்கான இடங்கள், அவற்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவோர் விபரங்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி17ம் தேதி சேலத்தில் நான் உரையாற்றுகிறேன். மாவட்டச் செயலாளர்கள், தங்கள் மாவட்டத்தில் நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களுக்கான நிகழ்ச்சிகளை அதிமுகவின் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகளுடனும் இணைந்து, சிறப்புப் பேச்சாளர்களுடன் தொடர்பு கொண்டு, பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து நடத்த வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## புதுச்சேரி அரசு ஊழியர்களுக்கு ரூ.6,908 தீபாவளி போனஸ் அறிவிப்பு




புதுச்சேரி: அக்.11-

புதுச்சேரி அரசு ஊழியர்களுக்கு ரூ.6,908 தீபாவளி போனஸ் அறிவிக்கப்பட்டுள்ளது.


மத்திய அரசு ஊழியர்களுக்கு தற்காலிக போனஸ் கணக்கிடும் உச்ச வரம்பை ரூ.7 ஆயிரத்துக்கு மிகாமல் நிர்ணயித்து நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது. மத்திய அரசு குரூப் சி மற்றும் நான்கெசட்டட் குரூப் பி ஊழியர்கள் 2024 25ம் ஆண்டிற்கான 30 நாட்கள் சம்பளத்திற்கு சமமான "அட்ஹாக் போனஸ்" பெறுவார்கள் இந்தத் தொகை ரூ.6,908 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் சம்பள முறையைப் பின்பற்றும் புதுவை யூனியன் பிரதேச ஊழியர்களுக்கும், இந்த உத்தரவுகள் நீட்டிக்கப்பட்டுள்ளன. இதன்படி, புதுவை அரசில் பணிபுரியும் குரூப் பி மற்றும் சி பிரிவு ஊழியர்களுக்கு தீபாவளி போனஸ் கிடைக்கும். கடந்த ஆண்டு மார்ச் 31ம் தேதியில் பணியில் இருந்த மற்றும் 2024 25 ஆண்டில் குறைந்தது ஆறு மாதங்களுக்கு தொடர்ச்சியான சேவை தந்த ஊழியர்கள் மட்டுமே இந்த உத்தரவுகளின் கீழ் போனஸ் பெறலாம்.

குறிப்பாக 3 ஆண்டுகள் அதற்கு மேல் பணிபுரிந்தோர் போனஸ் பெற தகுதியுடையவர்கள். போனஸை அந்தந்த துறைகளின் அனுமதிக்கப்பட்ட பட்ஜெட் ஒதுக்கீட்டில் இருந்து ஈடு செய்ய வேண்டும். மத்திய அரசின் உத்தரவைப் பின்பற்றி, புதுவை அரசின் நிதித் துறை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. புதுச்சேரி அரசின் நிதித் துறை சார்பு செயலர் சிவக்குமார் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். இந்த உத்தரவு நகலை அனைத்துத் துறை செயலர்கள், துறை தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## கரூர் சம்பவத்துக்கு பின் விஜய் அங்கிருந்து வெளியேற உத்தரவிடப்பட்டார்: உச்ச நீதிமன்றத்தில் தவெக வாதம்





புதுடெல்லி: அக்.11-

“கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தின்போது பொது ஒழுங்கை நிலைநாட்டவே எனது கட்சிக்காரர் (விஜய்) அந்த இடத்தைவிட்டு வெளியேற உத்தரவிடப்பட்டார். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உதவ எங்கள் தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை." என உச்ச நீதிமன்றத்தில் தவெக தரப்பில் வாதிடப்பட்டது.

கரூரில் தவெக தலைவர் விஜய் செப்.27ல் பங்கேற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 2 வயது குழந்தை, பெண்கள் உட்பட 41 பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வில்லிவாக்கத்தைச் சேர்ந்த தினேஷ் என்பவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிபதி செந்தில்குமார், கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு வழக்கை விசாரிக்க, வடக்கு மண்டல ஐ.ஜி.அஸ்ரா கார்க் தலைமையில், சிறப்பு புலனாய்வு குழு அமைத்து உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து தவெக சார்பில் உச்ச நீதிமன்றத்தில் கடந்த 8ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவில், “இந்த வழக்கில் மாநில காவல்துறை அதிகாரிகளின் பங்கு குறித்து தவெக சார்பில் ஏற்கனவே கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், காவல்துறை அதிகாரிகளைக் கொண்டே விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு பாரபட்சமாக செயல்படுகிறது.

'சம்பவ இடத்தில் இருந்து கட்சித் தலைவர் விஜய் தப்பி ஓடிவிட்டார்' என்றும், 'நடந்த சம்பவத்துக்கு விஜய் வருத்தம் தெரிவிக்கவில்லை' என்றும் நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கள் ஏற்கனவே விசாரணையில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. தவெக பேரணியில் பிரச்சினையை உருவாக்க முன்கூட்டியே திட்டமிடப்பட்ட சதி நடந்திருக்கலாம் என்பதை நிராகரிக்க முடியாது. எனவே, இந்த விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் பாரபட்சமற்ற விசாரணைக்கு உத்ரதவிட வேண்டும்" என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதேபோல், கரூர் சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட மறுத்த சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவை எதிர்த்து பாஜகவின் உமா ஆனந்தன் கடந்த 7ம் தேதி தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், நீதிபதி கே.வினோத் சந்திரன் அடங்கிய அமர்வு, இந்த வழக்கு அக்டோபர் 10ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என தெரிவித்தது. அதன் அடிப்படையில், இந்த வழக்கு நீதிபதிகள் ஜே.கே. மகேஸ்வரி, என்.வி. அஞ்சாரியா அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது.

தவெக சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சுப்ரமணியம், "உயர் நீதிமன்ற வழக்கு விசாரணையில் தவெக இணைக்கப்படவேயில்லை. எங்களுக்கு உரிய வாய்ப்பளிக்காமல், கூட்டத்தைக் கட்டுப்படுத்த தவறவிட்டதாக உயர் நீதிமன்றம் எங்கள் மீது குற்றம் சாட்டியது. தவெக தலைவர்கள் சம்பவ இடத்தில் இருந்து ஓடிவிட்டதாகவும் உயர் நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.

பொது ஒழுங்கை நிலைநாட்டவே எனது கட்சிக்காரர் (விஜய்) அந்த இடத்தைவிட்டு வெளியேற உத்தரவிடப்பட்டார். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உதவ எங்கள் தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அக்.3ம் தேதி உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு, கூட்டத்தைக் கட்டுப்படுத்த நிலையான செயல்பாட்டு நடைமுறையை வகுக்கக் கோரும் மனுவை அடிப்படையாகக் கொண்டது" என வாதிட்டார். தொடர்ந்து வாதம் நடைபெற்று வருகிறது.



# தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் மாணவிகளுக்கான தோல் மற்றும் கூந்தல் பராமரிப்பு விழிப்புணர்வு நிகழ்வு

தேவகோட்டை, அக்.11-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் மாணவிகளுக்கான தோல் மற்றும் கூந்தல் பராமரிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக காரைக்குடி தோல் மருத்துவர் டாக்டர் நந்தினி , காரைக்குடி மீனாட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை முனைவர் சாவித்திரி காரைக்குடி வி செவன் பிரைடல் ஸ்டுடியோவின் நிறுவனர் அருணா தேவி ஆகியோர்கள் பேசுகையில், மாணவிகள் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இருந்து தீர்வு காண்பதற்கும் கூந்தல் பராமரிப்பு முறைகள் பற்றியும் பல்வேறு விளக்கங்களை எடுத்துரைத்தனர். பின்னர் மாணவிகளின் சந்தேகத்திற்கு பல்வேறு பதில்களைக் கூறினர். முன்னதாக வணிக மேலாண்மை துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி மணிமேகலை வரவேற்புரையும் இறுதியாக வணிகவியல் துறையின் மாணவி அமலபிருத்திகா நன்றியுரையும் கூறினார். இதற்கான ஏற்பாட்டினை பெண்கள் பிரிவின் கல்வி முதன்மையர் முனைவர் பானுப்பிரியா செய்திருந்தார். இந்நிகழ்வில் கல்லூரியின் அனைத்து மாணவிகளும் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.





# தியாகி இமானுவேல் சேகரனின் 101ஆவது பிறந்தநாள் மதுரை மாட்டுத்தாவணி பேருந்துநிலையம் எதிரேயுள்ள இராமசுப்பு திருமண மண்டபத்தில் ஆரோ.ஸ்டீபன்ராஜ் நினைவு அரங்கில் சமூகநீதி கருத்தரங்கம் நடைபெற்றது

மதுரை, அக்.11-

மதுரை ஐந்திணை மக்கள் கட்சி மற்றும் தமிழர் முற்போக்கு கழகம் இணைந்து முன்னெடுத்த இந்த நிகழ்வுக்கு, ஐந்திணை மக்கள் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தோழர் வை.தேவதாசு தலைமையேற்றார்.

தமிழர் முற்போக்கு கழகத்தின் நிறுவனத் தலைவர் தோழர் எம்.எஸ். ஐங்கரன் ஈகி இமானுவேல் சேகரனின் படத்தைத் திறந்துவைத்து உரை நிகழ்த்தினார்.

தமிழர் முற்போக்கு கழகத்தின் தோழர் பகவான் பார்த்திபன் வரவேற்புரையாற்றினார்.

ஐந்திணை மக்கள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் தோழர் கு.சந்திரசேகர் சமூக எழுச்சிப்பாடல் பாடினார்.

* தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர் மீ.த. பாண்டியன், தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

கட்சியின் இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் தோழர் ஆறுமுகம் நன்றி கூறினார்.

முன்னதாக, கரூரில் நடிகர் விஜய் பரப்புரை சாலைக் காட்சியின்போது, சினிமா கவர்ச்சி மோகத்தில் திரண்டு, கூட்ட நெரிசலில் சிக்கி பலியான 41 அப்பாவி மக்களுக்கும் கடந்த சூலை மாத இறுதியில் உடல்நலக்குறைவு காரணமாக மறைவெய்திய மக்கள் போராளி தோழர் ஆரோ.ஸ்டீபன்ராஜ் அவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் கட்சியின் துணைப பொதுச் செயலாளர் வழக்குரைஞர் கருணாநிதி, அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் விசயன்குடி



ச.இராசு, தோழர் கீரணி அழகர்சாமி, சிவகங்கை கிழக்கு மாவட்ட செயலாளர் சீத்தூரணி இராசு, மேற்கு மாவட்ட செயலாளர் தோழர் பிச்சைமுத்து, புதுக்கோட்டை மாவட்ட தலைவர் மாணிக்கம், தூத்துக்குடி மாவட்ட செயலாளர் தோழர் கருப்பசாமி, நெல்லை மாவட்ட செயலாளர் தோழர் பகவதி, விருதுநகர் மாவட்ட செயலாளர் தோழர் கோபாலகிருஷ்ணன், விருதுநகர் மாவட்ட தலைவர் தோழர் மாடசாமி, சங்கரன்கோவில் ஒன்றிய செயலாளர் தோழர் வெள்ளைச்சாமி, காளையார் கோவில் ஒன்றிய செயலாளழ் தோழர் சி. பிரபாகரன், தமிழர் முற்போக்கு கழகத்தின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் தோழர் வினித், மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் ஆனஸ்ட்ராஜ், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் மூர்த்தி, மதுரை கிழக்கு மாணவரணி செயலாளர் தோழர் அஜித், மதுரை மாவட்ட மகளிரணி செயலாளர் கார்த்திகாதேவி ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும் மதுரை வழக்குரைஞர் விஜயன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மதுரை மாநகரப் பொறுப்பாளர் தோழர் இன்குலாப், சமூக செயற்பாட்டாளர் தோழர் திருச்சி இளங்கோ, மக்கள் விடுதலைக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் நிலவழகன், புரட்சிகர இளைஞர் முன்னணியின் தோழர் தமிழ்முருகன், தோழர் குமரன் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து கட்சியின் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

தகவல் தொழில்நுட்பப் பாசறை ஐந்திணை மக்கள் கட்சி



# இலங்கை சுற்றுலா துறை, இந்திய பயணிகளை ஈர்க்க மதுரை, சென்னை, கோவையில் ரோட்ஷோ

கோவை, அக்.11-

கோவை சின்னியம் பாளையம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் இலங்கை சுற்றுலா த்துறை தூதரணி குழு சார்பில் இந்திய பயணிகளை ஈர்க்க மதுரை சென்னை, கோவை ஆகிய நகரங்களில் ரோட்ஷோ பற்றி செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் தூதரணி குழுவை தலைமை வகிக்கும் விஜித ஹேரத், வெளிநாட்டு தொடர்புகள் அமைச்சர், சுற்றுலா தொடர்பான அமைச்சர், துணை துணை அமைச்சர் ருவான் ரணசிங்கே ஆகியோர் கூறியதாவது" இந்திய சுற்றுலா பயணிகளை ஈர்க்க பயணிகளுக்கு விசா இல்லா நுழைவு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பலவிதமான சுற்றுலா வாய்ப்பு களை இந்தியாவின் முக்கிய சந்தைகளில் வெளிப்படுத்த, 2025 அக்டோபர் 6, 8 மற்றும் 10 ஆகிய தேதிகளில் மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை நகரங்களில் தொடர்ச்சியான ரோட் ஷோ (B2B) மற்றும் நெட்வொர்க்கிங் நிகழ்வுகளை நடத்துகிறது.

மேலும் இந்த தூதரணி குழுவில் 40க்கும் மேற்பட்ட இலங்கை நிபுணர்கள் இந்திய பயணத்துறையுடன் தொடர்பு கொள்ள உள்ளனர். மேலும் தென் இந்தியா எப்போதும் இலங்கைக்கு முக்கியமான சுற்றுலா சந்தையாக இருந்துள்ளது இதற்குப் பிற காரணங்களும் உள்ளன, அருகாமை மட்டும் அல்ல, நமது ஆழமான கலாச்சார, மத மற்றும் வரலாற்று தொடர்புகளும் ஆகும். மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை நகரங்களில் நடைபெறும் எங்கள் ரோட்சோக்கள் மூலம், இந்த உறவுகளை வலுப்படுத்தி, இலங்கையை சுற்றுலா, MICE மற்றும் ஆன்மீக பயணங்களுக்கு வருட முழுவதும் முன்னுரிமை பெற்ற தலமாக வெளிப்படுத்துவதே எங்கள் நோக்கம் என தெரிவித்தனர்.

இந்த நிகழ்வுகளில் ஒவ்வொரு நகரிலும் 200க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்; இதில் இந்திய பயண முகவர்கள், தொழிற்துறையின் முக்கிய நபர்கள் மற்றும் ஊடக தூதர்கள் இலங்கை இந்தியா உறவுகளை வலுப்படுத்த, சுற்றுலா துறையில் பயனுள்ள ஒத்துழைப்பு வாய்ப்புகளை உருவாக்குவதே இந்த நிகழ்வுகளின் நோக்கம் இந்திய சந்தையுடன் உறவுகளை வளர்க்கும் இலங்கை சுற்றுலாவின் தொடர்ச்சியான முயற்சியின் முக்கிய பகுதியை பிரதிபலிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# பெருங்களத்தூரில் 55வது வார்டு நீர் தேக்க தொட்டியை கட்டிடம் மற்றும் 56வது வார்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் முதல்வர் படிப்பகத்திற்கான கட்டிடம் கட்டுப்பணி பூமி பூஜை

பெருங்களத்தூர், அக்.11-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்திற்கு உட்பட்ட 55வது வார்டு ஆல்வின் கார்டனில் டிஎப்சி நிதியிலிருந்து 2,50 லட்சத்தில் புதிதாக நீர் தேக்க தொட்டியை கட்டிடம் கட்டும் பணிக்கான பூமி பூஜை மற்றும் 56வது வார்டு காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் கல்வி நிதியிலிருந்து புதிய கட்டிடத்திற்கு ருபாய் 2.50 லட்சத்தில் முதல்வர் படிப்பகத்திற்கான கட்டிடம் கட்டும் பணிக்கான பூமி பூஜை நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார் இந்த நிகழ்ச்சியில் உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, 4வது மண்டல குழு தலைவர் பகுதி குதி கழக செயலாளர் டி.காமராஜ், தெற்கு பகுதி செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான சேகர், பி.புகழேந்தி வட்ட செயலாளர் சுரேஷ், பகுதி நிர்வாகிகள் மாநகர நிர்வாகிகள் நல சங்க நிர்வாகிகள், பெருமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# சத்தியமங்கலம் ஊராட்சியில் பா.ம.க.மாநில தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்தநாள் விழா

**பா.ம.க.வினர் கேக் வெட்டி, இனிப்புகள், அன்னதானம் மற்றும் நலதிட்ட விழாவாக வேட்டி, சேலைகள் வழங்கி சிறப்பிப்பு**

வேலூர், அக்.11-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, சத்தியமங்கலம் மற்றும் பொய்கை ஆகிய ஊராட்சிகளின், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலத் தலைவர் அன்புமணி ராமதாஸ், 57ம் பிறந்தநாள் தினத்தை முன்னிட்டு சத்தியமங்கலம் மற்றும் பொய்கை ஊராட்சியிகளில் பிறந்த நாள் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் துணைத் தலைவரும், சத்தியமங்கலம் ஊராட்சி மன்ற தலைவருமான இளங்கோவன், ஒன்றிய செயலாளர் சிவா, ஆகியோர் தலைமையில் கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் கிழக்கு மாவட்ட தலைவர் பி.கே. வெங்கடேசன், மாவட்ட செயலாளர் ஜெகன் ஆகியோர் கலந்துகொண்டு, கேக் வெட்டி, பட்டாசுள் வெடித்தும் பொது மக்களுக்கு மன்னிப்புகள் வழங்கி, இலவச வேட்டி, சேலை நலதிட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் பாபி கதிரவன், மாநகர இளைஞரணி செயலாளர் சரவணன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ரேணு, மனதைக் கவரும் சிறந்த பேச்சாளரும், மாவட்ட அமைப்பு செயலாளருமான அக்னி வேல்முருகன், மாவட்ட தேர்தல் பணிக்குழு செயலாளரும், தொழிலதிபருமான செங்குட்டுவன், மோகன்ராஜ், T.M.K .மோகன், சமூகநீதி பேரவை வழக்கறிஞர் சந்துரு, மஞ்சுநாதன், ஒன்றிய செயலாளர் சதீஷ் உள்ளிட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட்ட ஒன்றிய நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகளுக்கு சத்தியமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் இளங்கோவன், கட்சியின் துண்டு அணிவித்து கௌரவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பாட்டாளி மக்கள் கட்சி வேலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் அன்னதானம். வழங்கும் நிகழ்ச்சி

வேலூர், அக்.11-

வேலூர் மாவட்டம் , பாட்டாளி மக்கள் கட்சி வேலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வேலூர் பழைய மாநகராட்சி அருகில் கேக் வெட்டி பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் சேலைகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞரணி செயலாளர் ரா பாலாஜி தலைமையிலும் மாவட்ட செயலாளர் பா ஜெகன் முன்னிலையிலும் நடைபெற்றது உடன் ,நகரச் செயலாளர் சரவணன் ,துணை செயலாளர் புருஷோத்தமன் வன்னியர் சங்கம் தண்டா என்கிற தண்டபாணி மண்டல செயலாளர் மோகன் மாணவரணி சதீஷ் சாய் மற்றும் பாமக நிர்வாகிகள் ,பொதுமக்கள் ,பலர் கலந்து கொண்டனர்.

# அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் அதிகாரிகளால் அவதியுரும் அரசு இயந்திரம்



சிவகங்கை, அக்.11-

சிவகங்கை மாவட்டம் ஆட்சியர் சிறப்பாக பணியாற்றி வரும் சூழ்நிலையில் அக்கறை இல்லாமல் அலுவலகத்திற்கே வராமல் சம்பளம் வாங்கிச் செல்லும் அரசு அலுவலர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் அதில் முதல் இடத்தை பிடித்தவர் இணை இயக்குனர் மருத்துவத்துறை அலுவலகத்திற்கு வருவதில்லை இதனால் தனியார் மருத்துவமனைகள் கண்காணிக்கப்படுவதே கிடையாது இவர் நேர் பார்வையில் சில அரசு மருத்துவமனைகளும் செயலாற்றுகின்றன ஆனால் பணியாற்றுவது ஒரு ஊரில் கூடுதல் படி சிவகங்கை வாரத்தில் ஒரு நாள் வந்து பணியாற்றினாலே போதுமானது ஆனால் இங்கு வருவதே கிடையாதாம் அலுவலகத்தில் தடி எடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரர்கள் என்ற சூழ்நிலையில் அவரவர் பங்குக்கு அவரவர் பங்குக்கு மிரட்டி தனியார் மருத்துவமனையில் தீபாவளி வசூல் ஆரம்பித்து விட்டார்களா இவ்வாறு வசூல் ஆரம்பித்தால் தரமான மருத்துவம் எவ்வாறு ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கும் என்பதே வருத்தம் .

அரசாக இருக்கட்டும் தனியார் மையமாக இருக்கட்டும் அனைத்துமே கண்காணிக்கப்பட வேண்டும் என்பதே மாண்புமிகு முதலமைச்சர் கூற்று ஆனால் அவரவர் நோக்கத்திற்கு உழைக்காமல் சம்பளத்தைப் பற்றி சொல்வதே அவர்கள் உடம்பில் எப்படி ஒட்டுகிறதோ என்று சக அயராது உழைக்கும் பணியாளர்கள் கூறி வருகிறார்கள் இன்னும் சில அலுவலகங்களில் அரசு வழங்கும் அகவிலை படியில் மட்டுமே குடும்பத்தை நடத்தி வரும் நேர்மையான தெய்வங்களும் வாழ்ந்துதான் வருகிறார்கள்.

ஆனால் அவர்கள் என்னதான் உழைத்தாலும் சோம்பேறிகள் அவர்களை முட்டாளாக்கிவிடும் சூழலில் அவர்கள் மனம் வேதனை அடைகிறார்கள் என்றும் தங்கள் கஷ்டப்படும் சூழ்நிலை எங்கும் கூற முடியாமல் மனக்குமுறலை தனக்குள்ளே அடக்கி வைத்துக் கொண்டு நாளை விடியல் வரும் நாளை மறுநாள் விடியல் வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்

தற்பொழுது உள்ள சூழ்நிலையில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் சிறப்பாக பணியாற்றி வருகிறார் முதலமைச்சர் கண்ணியத்துடன் கண்காணித்து வருகிறார் மருத்துவ அமைச்சரும் 24 மணி நேரமும் விழிப்புடன் இருக்கிறார் ஆனாலும் சில ஏமாற்றுவாதிகள் ஏமாற்றி வருகிறார்கள் இவர்களை எப்பொழுதுதான் இவர்கள் மீது அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று புரியவில்லை என்று பெயர் சொல்ல விருப்பம் இல்லாமல் பயந்த நிலையில் அரசு மருத்துவ ஊழியர்கள் கூறினார்.



# வேலூர் ஆட்சியரகத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர். தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம்

வேலூர், அக்.11-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியராக கூட்டரங்கில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் அருட்தந்தை சொ. ஜோ. அருண், சே.ச. தலைமையில் சிறுபான்மையினர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

வேலூர் மாவட்ட சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் அருட்தந்தை சொ. ஜோ. அருண், சே.ச. சிறுபான்மையின மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, அரசின் திட்டத்திலிருந்து 60 பயனாளிகளுக்கு ரூ.8.16 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆ.மயில்வாகணன், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய துணைத்தலைவர் அப்துல்குத்தூஸ் (எ) இறையன்பன் குத்தூஸ். தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் பிரவீன்குமார் டாட்டியா. ராஜேந்திர பிரசாத். ரமீட் கபூர். ஜே.முகமது ரஃபி. எஸ்.வசந்த், நாகூர்.எ.எச்.நஜிமுதீன். சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன் (வேலூர்). வி.அமுலு விஜயன் (குடியாத்தம்), மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, சிறுபான்மையினர் நலத்துறை துணை இயக்குநர் எஸ்.ஷர்மிளி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் சு.ஜெயசித்ரா, சிறுபான்மையினர் நல உறுப்பினர் எழிலரசன் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தேசிய தன்னார்வ இரத்ததான தின விழா

வேலூர், அக்.11-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அடுக்கம் பாறை, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இரத்ததான முகாமை வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தொடங்கி வைத்து, முகாமை பார்வையிட்டார். இம்முகாமில் வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.ரோகிணிதேவி, மருத்துவ கண்காணிப்பாளர் மரு.ரதி திலகம், கல்லூரி துணை முதல்வர் மரு.கௌரி வெளி கொண்டலா, மரு.ரவிசந்திரன், மரு.தீபக் மற்றும் மருத்துவமனை துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வேலூர் மாவட்டம் காட்பாடி ஆக்ஸிலியம் கல்லூரியில் நாட்டு நல பணி திட்டம் துவங்கி 50 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு உலக சாதனை நிகழ்வு



வேலூர், அக்.11-

வேலூர் மாவட்டம் ஆக்ஸிலியம் கல்லூரியின் நாட்டு நல பணி திட்டம், நறுவி மருத்துவமனையோடு இணைந்து மாபெரும் ரத்த சோகை விழிப்புணர்வு முகாமினை நடத்தியது. இதில் 3500 க்கு மேற்பட்ட மாணவி களுக்கு ஹீமோகுளோபின் கண்டறியப்பட்டது. இந்தியாவில் அதிக விழுக்காடு பெண்கள் ரத்த சோகையால் பாதிக்கப்படும் நிலையில் அதனைக் குறித்த விழிப்புணர்வை இளம் பெண்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கிலும், 3500 க்கும் மேற்பட்ட பெண்களுக்கு சுமார் மூன்று மணி நேரத்திற்குள் ஹீமோகுளோபின் பரிசோதனை செய்து இந்தியா மற்றும் ஆசிய சாதனை புத்தகக்கத்தில் இடம்பெறச் செய்யும் முயற்சிக்காகவும் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வினை நிகழ்வினை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி துவங்கி வைத்தார். நறுவி மருத்துவமனையில் நிறுவனத் தலைவர் ஜிவி சம்பத் முன்னிலை வகித்தார். கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரி முனைவர் ஆரோக்கிய ஜெயசீலி தலைமை வகித்தார். கல்லூரியின் செயலாளர் அருட் சகோதரி முனைவர் மேரி ஜோஸ்பின் ராணி துணை முதல்வர் அமலா வளர்மதி வாழ்த்துரை வழங்கினார். வணக்கத்திற்குரிய மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையர் லட்சுமணன், துணை மேயர் சுனில் குமார், வேலூர் மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குனர் பரணிதரன், மாநகர சுகாதார அலுவலர் பிரதாப் குமார், வேலூர் மண்டலம் ஒன்றின் தலைவர் சுஜாதா வன்னிய ராஜா, கல்லூரி கல்வியியல் இணை இயக்குனர் முனைவர் மலர், திருவள்ளுவர் பல்கலைக்கழக நாட்டு நல பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் விஜய் ஆனந்த், ஒருங்கிணைந்த குழந்தைகள் நல சங்கத்தின் மாவட்ட திட்ட அலுவலர் சாந்தி பிரியதர்ஷினி, உதவும் உள்ளங்கள் சந்திரசேகர் மருத்துவர் தில்லைவாணன் மருத்துவர் முகமது சகி, திரு. செந்தமிழ் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வுகளை சிறப்பித்தனர். நாட்டு நலப் பணி திட்ட அலுவலர் முனைவர் அமுதா வரவேற்புரை வழங்கினார்.

ரத்தசோகை, ஊட்டச்சத்து, இயற்கை உணவு முறை குறித்த விழிப்புணர்வு பதாகைகள், இரும்பு ஒருங்கிணைந்த சத்து நிறைந்த காய்கறிகள் பழங்கள் மற்றும் தானிய வகைகளை குழந்தைகள் நல சங்கம் மற்றும் மக்கள் மக்கள் நல சந்தை ஒருங்கிணைப்பாளர்கள் காட்சிப்படுத்தியிருந்தனர். நறுவி மருத்துவமனையின் சார்பாக ஹீமோகுளோபின் குறைபாடு உள்ள மாணவிகளுக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது. நாட்டு நல பணி திட்ட அலுவலர் திருமதி காயத்ரி நன்றி உரை வழங்கினார். இந்நிகழ்வினை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள் அமுதா காயத்ரி, தனபாக்கியம், அஸ்வினி, அனுராதா, கேர்லின், ஒருங்கிணைத்தனர்.







■ மதுரை கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மேலவளவு, சென்னகரம்பட்டி,எட்டிமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர் செல்ல பாண்டியன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார்,முத்தையா,ஊராட்சி செயலாளர் சுவேகம்,ரூபா ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர். முகாமில் கொட்டாம்பட்டி ஒன்றிய திமுக செயலாளர் ராஜராஜன் கலந்து கொண்டார்.



■ மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் உட்பட்ட நரசிங்கம் ஊராட்சிக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமைமுகாமில் தாசில்தார் மானேஷ் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் ஜோதிராஜ், ஆகியோர் தொடங்கி வைத்தனர்.முகாமில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன் ஊராட்சி செயலாளர் சசிக்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்த் திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் ரெகுபதி மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# வேலூர், மண்டி தெருவில், காங்கிரஸ் சார்பில் கையெழுத்து இயக்க கூட்டம்: தமிழக முன்னாள் காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி பங்கேற்று சிறப்புரை



வேலூர், அக்.11-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, பழைய பேருந்து நிலையம் அருகே, மண்டி தெருவில், காங்கிரஸ் சார்பில் கையெழுத்து இயக்க கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழக முன்னாள் காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி பங்கேற்று சிறப்புரையாற்றி கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்து, செய்தியாளர்களை சந்தித்தனர். கே.எஸ். அழகிரி பேசியதாவது: கரூர் விவகாரத்தில் விஜய் மீது கடுமையான போக்கை காங்கிரஸ் கடை பிடிக்க வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்களா..? ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் பங்கு என்பது எங்களுடைய கருத்து, கூட்டணிக்கு எதிரான கருத்து அல்ல. அனைத்து கட்சிகளும் இதை தான் விரும்பும். ஸ்டாலினிடம் சொல்லிவிட்டு தான் ராகுல்காந்தி விஜயிடம் பேசினார் என செல்வப் பெருந்தகை கூறியது தவறான கருத்து அல்ல. விஜய் எப்போது வேண்டுமானாலும் ராகுல்காந்தியை நேரடியாக சந்திக்கலாம், பேசலாம். இதை யாரும் தடுக்க முடியாது ஆனால் இது கூட்டணி ஆகாது என இவ்வாறு பேசினார்.

கரூர் சம்பவம் தொடர்பாக தமிழக காங்கிரஸ் விஜய் குறித்து மென்மையான போக்கை கடைபிடிப்பதாக எழும் விமர்சனங்கள் குறித்து கேட்டதற்கு, அப்படியானால் காங்கிரஸ் விஜய்க்கு எதிரான கடுமையான போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என நினைக்கிறீர்களா என கேள்வி எழுப்பினர்.

கரூர் விவகாரத்தில் மென்மையான போக்கை கடைபிடிக்கிறோம் என்பதற்காகவெல்லாம் கூட்டணி மாறாது, இதனால் தமிழகத்தில் கூட்டணி எக்காரணம் கொண்டும் உடையாது. அந்த அளவிற்கு பலவீனமான கூட்டணி நாங்கள் இல்லை எங்கள் கூட்டணி கொள்கை ரீதியான கூட்டணி. முதலமைச்சர் ஸ்டாலினிடம் சொல்லிவிட்டு தான் ராகுல் காந்தி விஜியிடம் பேசியதாக செல்வப் பெருந்தகை கூறியிருந்தது குறித்து கேட்டதற்கு, செல்வப் பெருந்தகை அந்த பொருள்பட பேசவில்லை, நீங்கள் அது போன்று உருவாக்க வேண்டாம். எங்கள் தலைவர் ராகுல் அகில இந்திய தலைவர் அல்ல அகில உலக தலைவர். விஜய் ராகுல் காந்திக்கு நீண்ட கால நண்பர் பல நேரங்களில் சந்தித்து பேசி இருக்கிறார். விஜய் ராகுல் காந்தியை சந்திக்க வேண்டும் என்றாலோ, பார்க்க வேண்டும் என்றாலோ, அவரிடம் பேச வேண்டும் என்றாலோ விஜய் யாருடைய அனுமதியையும் பெறவேண்டிய அவசியம் இல்லை நேராக அவர் நினைக்கும் போதெல்லாம் பேசலாம். ஆக இதற்கும் அதற்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை. ஒரு பெரிய மனிதராக கரூர் சம்பவம் குறித்து இருவரிடம் ராகுல் பேசியுள்ளனார்.

காங்கிரஸ் தரப்பில் ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் அங்கு என முன்வைக்கப்படுவது குறித்து கேட்டதற்கு, இது என்னுடைய கருத்துக்கள், எங்கள் சம்மந்தப்பட்ட கருத்துக்கள் யாருக்கும் எதிரான கருத்து அல்ல. கூட்டணிக்கு எதிரான கருத்து அல்ல. ஒவ்வொரு கட்சியும் வலிமையாக வர வேண்டும் என்பதுதான் அரசியல். தேர்தலில் வெற்றி பெற 100 மதிப்பெண் வேண்டும். அது தனித்தனியாக இருந்தால் வெற்றி பெற முடியாது அந்த வகையில் 70 இருக்கும்போது 30 ஒன்று சேர்ந்தால் தான் வெற்றி பெற முடியும். எங்களுக்கு அதிகாரம் வேண்டும் என விரும்புகிறோம் அது தவறு இல்லை. அது நேர்மையான முறையாக பேசப்படுகிறது அதுவும் தவறில்லை என தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறினார். இந்த நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் பி.டிக்காராமன், முன்னாள். வேலூர் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் தேவேந்திரன், சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் வாஹித் பாஷா மற்றும் திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், காங்கிரஸ் நிர்வாகிகள் ரகு, வழக்கறிஞர் கிருஷ்ணகுமார், கப்பல் மணி, எஸ்சி எஸ்டி பிரிவு சித்தரஞ்சன், மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# மாவட்ட தலைநகரை விட்டு நீதிமன்றங்கள் காரைக்குடி கொண்டு செல்ல முயற்சிப்பதை கண்டித்து வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம்

சிவகங்கை, அக்.11-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கையில் செயல்பட்டு வரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மற்றும் ஊழல் தடுப்பு நீதிமன்றங்கள் உள்ளிட்டவற்றை காரைக்குடி நகருக்கு கொண்டு செல்வதைத் தடுத்திடும் வகையில் நேற்றைய தினம் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பேரணியாக வலம் வந்து எதிர்ப்பை பதிவுசெய்தனர்...

இந்நிலையில் நேற்று சிவகங்கை அரண்மனை வாசல் பகுதியில் வழக்கறிஞர் சங்கப் பொருளாளர் தீபன் சக்கரவர்த்தி வரவேற்புரையாற்றிட சிவகங்கை வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஜானகிராமன் தலைமையில் சங்க செயலாளர் சித்திரைச்சாமி, இணைச் செயலாளர் ரவிக்குமார் வழக்கறிஞர்கள் நவநீதன், வெ. மதி, பாஸ்கரன், பில்லூர் கார்த்திக், தங்கபாண்டியன், மகேந்திரக்குமார், வல்மீகிநாதன், செல்வராஜன், ராமலிங்கம், பழனிச்சாமி, களஞ்சியராஜா, ஆகியோர் முன்னிலையிலும் உண்ணாவிரதம் நடைபெற்றது...

உண்ணாவிரதத்தில் பலரும் நீதிமன்றங்களை காரைக்குடி நகருக்கு இடமாற்றம் செய்வதை எதிர்த்து வன்மையாக கண்டனங்களை பதிவு செய்தனர்.. அதிலும் குறிப்பாக சட்டக்கல்லூரி, வேளான் கல்லூரி, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை என பல எண்ணற்ற விசயங்களை தலைநகரில் செயல்படுத்தாமல் ஒருதலை பட்சமாக ஒருசிலர் அதிகாரத்தில் இருப்பவர்களின் செயல்பாடுகளே இதற்கு காரணம் என பலரும் தங்களின் எதிர்ப்பை பதிவு செய்தனர்...

இந்த உண்ணாவிரதத்தில் திமுக, காங்கிரஸ், அதிமுக கம்யூனிஸ்ட், மதிமுக, விசிக, அமமுக, பாஜக, தவெக மற்றும் நகர் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்...

இதில் திமுக சார்பில் ஆதி. அழகர்சாமி, பாஸ்கரன், பில்லூர் கார்த்திக், துஷாந்த் பிரதீப் குமார், வல்மீகிநாதன் ,, சா. கதிர்காம நாதன் , சித்தலூர் பா.ஆனந்தக்குமார், கண்மணி , கவுன்சிலர்கள் வீரகாளை , துபாய் காந்தி , திருநாவுக்கரசு , பிறைசூடன், தினேஷ்பாண்டியன், மதிமுக சார்பில் தீபன் சக்கரவர்த்தி , காங்கிரஸ் சார்பில் இராஜரத்தினம், சண்முகராஜன், எஸ். எடி காங்கிரஸ் மேலமங்களம் முரளீதரன் ,அதிமுக சார்பில் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் , விஜய ஆனந்த் , பாஜக எம். ஆர். உதயா , கிருஷ்ண குமரேஷ் , சிபிஎம் வெ. மதி , மோகன், முத்துராமலிங்கபூபதி, உலகநாதன் , விசிக சார்பில் மாவட்ட செயலாளர் வே. பாலையா , ஆதி. வளவன் , ஒன்றிய செயலாளர்கள் கார்த்திக் , விஜயன் , முனைவர் காளீஸ்வரி , அமமுக உதயகுமார், செந்தில் , ஓபிஎஸ் கே. வி. சேகர் , நகர் வர்த்தக சங்கம் அறிவுத்திலகம் , வழக்கறிஞர்கள் சூரக்குளம் சுரேஷ், வைகை ஸ்ரீ தர், பாரதிராஜா , மகேந்திரன், விஜயதேவி, சுதா , இராமலிங்கம் , ஆதிமூலம் , தங்கப்பாண்டியன், அபிராமி, இலக்கியா, வேணி , ரதிப்ரியா , சத்யா , தவெக சார்பில் மாவட்ட பொருளாளர் கண்ணதாசன் தலைமையில் நிர்வாகிகள் என இருநூறுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்...

வடமாநிலத்தில் இருமல் மருந்து குடித்து 20 குழந்தைகள் பரிதாபமாக பலி

# மருந்து கம்பெனி உரிமையாளர் ரங்கநாதன் 09.10.2025 அன்று சென்னை கோடம்பாக்கத்தில் மத்திய பிரதேச போலீஸாரால் கைது

‘கோல்ட்ரிப்’ என்ற இருமல் மருந்து முற்றிலும் அரசால் தடை செய்யப்பட்டுள்ளது




காஞ்சிபுரம், அக்.11-

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார் சத்திரத்தில் செயல்படும் ஸ்ரீசென் மருந்து நிறுவனத்தின் ‘கோல்ட்ரிப்’ இருமல் மருந்தை குடித்து மத்தியப்பிரதேசத்தில் 20 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். குழந்தைகள் சிறுநீரகங்கள் செயல் இழந்ததால் இந்த இறப்புகள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ‘கோல்ட்ரிப்’ இருமல் மருந்து விற்பனைக்கு தடை விதிக்கப்படது. மேலும், கேரளா, தெலங்கானா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருந்து விற்பனை ரத்து செய்யப்பட்டது.

குழந்தைகளின் சிறுநீரக செயழலிப்புக்கு காரணமாக கூறப்படும் ‘கோல்ட்ரிப்’ இருமல் மருந்தில், பெயின்ட், மை போன்றவை தயாரிக்க பயன்படுத்தப்படும் டை எத்திலீன் கிளைசால் என்ற ரசாயன வேதிப்பொருள் இருந்தது ஆய்வில் கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் இந்த மருந்து பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் இருமல் மருந்து தயாரிப்பு கம்பெனியின் உரிமையாளர் ரங்கநாதன் தலைமறைவானார். அவரை போலீஸார் தேடி வந்தனர். இந்த நிலையில், சென்னை கோடம்பாக்கத்தில் பதுங்கியிருந்த ‘கோல்ட்ரிப்’ இருமல் மருந்து கம்பெனி உரிமையாளர் ரங்கநாதனை மத்தியப் பிரதேச போலீஸார் 09.10.2025 வியாழக்கிழமை கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேவகோட்டை ராம்நகரில் ஸ்ரீ பாலமுருகன் கோவிலில் கார்த்திகையே முன்னிட்டு சிறப்பு அலங்கார அபிஷேகம்



சிவகங்கை, அக்.11-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ராம்நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீ பாலமுருகன் கோவிலில் கார்த்திகையை முன்னிட்டு சிறப்பு அலங்கார அபிஷேகம்ல் உள்ளது. இன்று தேய்பிறை சஷ்டி தினத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேக் ஆராதனைகள் நடைபெற்றது. முன்னதாக விநாயகரருக்கு சிறப்பு அபிஷேகம் செய்தனர். பின்னர் ஸ்ரீ பாலமுருகனுக்கு மஞ்சள், சந்தனம், பால், தயிர், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், பன்னீர்திருநீர், 11வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது. அபிஷேகங்களுக்கு பின்னர் முருகனுக்கு சிறப்பு அலங்காரம் செய்திருந்தனர். பக்தர்கள் பக்தர்கள் சஷ்டி கவசம் பாடினர். திரளான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று சாமி தரிசனம் செய்தனர்.

அபிஷேகங்கள் நடைபெற்றது. அபிஷேகங் களுக்கு பின்னர் முருகனுக்கு சிறப்பு அலங்காரம் செய்திருந்தனர். பக்தர்கள் பக்தர்கள் சஷ்டி கவசம் பாடினர்.திரளான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று சாமி தரிசனம் செய்தனர்.





# தேவகோட்டைஆனந்தா கல்லூரி, புத்தகத் திருவிழா



தேவகோட்டை, அக்.11-

சிவகங்கை மாவட்டம்தேவகோட்டை ஆனந்தா கல்லூரியும் மதுரை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து புத்தகத் திருவிழா கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் கலந்துகொண்டு புத்தகத் திருவிழாவை ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்து பேசுகையில், இன்றைய சூழலில் வாசிப்பின் அவசியத்தை உணர்ந்து மாணாக்கர்கள் பல்வேறு நூல்களை வாசித்து தங்களின் வாழ்வியல் திறனை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் தான் இது போன்ற புத்தகத் திருவிழாக்கள் நடத்தப்படுகிறது ஆகையால் இப்புத்தகத் திருவிழாவின் பயனை உணர்ந்து மாணவர்கள் பல்வேறு நூல்களை வாங்கியும் வாசித்தும் பயன்பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வில் மதுரை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் சார்பாக வந்திருக்கக் கூடிய திரு கிருஷ்ணமூர்த்தி மற்றும் கல்லூரியின் துணை முதல்வர்கள் கல்வி முதன்மையர்கள் இருபால் ஆசிரியர் பெருமக்கள் மாணாக்கர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினைக் கல்லூரியின் நூலகத்துறைப் பேராசிரியர் ஆரோக்கியசாமி செய்திருந்தார்.



# திருவஞ்சேரி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி நடைபெற்றது

திருவஞ்சேரி, அக்.11-

செங்கல்பட்டு மாவட்டம் திருவஞ்சேரி ஊராட்சியில் காலை 9மணி முதல் மாலை 3 மணி வரை திருவஞ்சேரி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை தாம் பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா குத்துவிளக்கு ஏற்றி துவங்கி வைத்தார் இதில் 15 துறைகளை சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினர் இந்த நிகழ்ச்சியில் தலைவர் எஸ்.ஜனனி சுரேஷ்பாபு, துணைத்தலைவர் எஸ்.ருக்மணி சக்தி, வார்டு உறுப்பினர்கள் எஸ்.நாகலிங்கம், ஜி.சூர்யா பொன்னுவேல், எஸ்.இம்மானுவேல், ஜி.ஜெயசௌந்தரி ஞானசேகர், பி.செல்வி பாபுஜி, வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், பணி மேற்பார்வையாளர், ஊராட்சி செயலர் வேலுசாமி மற்றும் அனைத்து துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள், திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்





# அரசனூர் பள்ளிக்கு கல்விச்சீர் வழங்கிய மேலான்மைக்குழு மற்றும் பொதுமக்கள்

சிவகங்கை அக்11-

சிவகங்கை மாவட்டம் அரசனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கல்விச்சீர்களை பள்ளி மேலான்மைக்குழு, கிராமப் பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து வழங்கிச் சிறப்பித்தனர்..

இந்திய அளவில் தன்னிரைவு பெற்ற கிராம ஊராட்சியாக விருது பெற்ற ஊராட்சியான அரசனூரில் இந்த நடுநிலைப் பள்ளியானது செயல்பட்டு வருகிறது...

கிராம தன்னார்வலர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் பலரும் ஆர்வத்துடன் தங்களால் இயன்ற பள்ளிக்குத் தேவையான மின்விசிறிகள் , டேபிள், சேர், விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பொருளுதவி மற்றும் நிதி உதவிகளை செய்தனர்...

கல்விச்சீர்வரிசைகளை பேண்டு வாத்தியங்கள் முழங்கிட ஊர் நாட்டாமை மற்றும் கிராமப் பொதுமக்கள், பள்ளி மேலான்மைக்குழுவினர் , பெற்றோர் மற்றும் மாணவர்கள் தலையில் சுமந்தபடி எடுத்து வந்தனர்...

தலைமை ஆசிரியர் மகீஷா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பள்ளி மேலான்மைக் குழுத் தலைவர் ப்ரியா , துணைத்தலைவர் முருகேஷ்வரி , பள்ளி ஆசிரியர்கள் இராமசுப்பிரமணியன் , இராஜலெட்சுமி , விஜயபாரதி , செல்வராணி , சங்கரலெட்சுமி சரஸ்வதி, உமா , முத்துச்செல்வி , அரச்சனா, பள்ளி மேலான்மைக்குழு உறுப்பினர்களான மதீஷ்வரி, பொன்னீஷ்வரி , முத்துமீனாட்சி , காளீஸ்வரி, போதும்பொண்ணு, விஜி, சத்யா ,தெய்வானை , தீபா ,முருகபாண்டி , பாண்டிசெல்வி , பேச்சிப்ரியா , எம். காளீஸ்வரி, பிரியங்கா , புஷ்பவள்ளி, ஏ.காளீஸ்வரி , கார்த்திகைச்சாமி , பாக்கியராஜ் , சிவசுந்தரி, முத்துப்பாண்டி , ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக வட்டாரக் கல்வி அலுவலர் ஜெயா ,ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், செல்வராணி அய்யப்பன் , அரசு முன்னாள் வழக்கறிஞர் அன்பரசன் , ஐடிபீபி உதவி கமாண்டர் விக்னேஷ்வரன் , வழக்கறிஞர் ரம்யா பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...

இதனைக்கண்ட சுற்றுவட்டார கிராமப் பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டிச் சென்றனர்..

கலந்து கொண்ட அனைவருக்கும் கணித ஆசிரியர் இராமசுப்பிரமணியன் நன்றி தெரிவித்தார்...




■ தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை “WE SERVE TO SAVE” (நாங்கள் மீட்பதற்காக சேவை செய்கிறோம்) எனும் உன்னத குறிக்கோளுடன் மாநில மக்களுக்கு சேவை புரிகிறது. இத்துறையின் முதன்மைப் பணியானது, அழிவுகரமான தீயிலிருந்து உயிர்களையும், சொத்துக்களையும் பாதுகாப்பதும், வெள்ளம், புயல், நிலச்சரிவு போன்ற இயற்கை பேரழிவுகள் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகளுக்கு திறம்பட பதிலளிப்பதும் ஆகும். துறையின் பெயர் குறிப்பிடுவது போல், அதன் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள், கஷ்டத்தில் உள்ள மனிதர்கள் மற்றும் விலங்குகள் இருவரின் உயிர்களையும் மீட்பதற்காக பல்வேறு மீட்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். பொதுமக்களிடையே தீ பாதுகாப்பு விழிப்புணர்வை பரப்புவதற்காக, இத்துறை” வருகை தந்து கற்றுக்கொள்ளுங்க” (COME AND LEARN) என்ற ஒரு முன்முயற்சியைத் தொடங்கியுள்ளது. உள்ளூர் மக்களை அருகிலுள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையங்களுக்கு வரவரவழைத்து, அத்தியாவசிய தி பாதுகாப்பு நடைமுறைகளைக் கற்றுக்கொடுப்பதற்காகவே இந்த விழிப்புணர்வு நிரல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதும் உள்ள 375 தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையங்களிலும் உள்ள பணியாளர்கள், அக்டோபர் 11 மற்றும் 12, 2025 ஆம் தேதிகளில் தீயணைப்பு நிலையங்களுக்கு வரும் மக்களுக்கு ஒவ்வொரு நாளும் மூன்று விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தப்படும். இந்த அமர்வுகள் காலை 10.00 முதல் 11.00 மணி வரை மதியம் 12.00 முதல் 13.00 மணி வரை மற்றும் மாலை 16.00 முதல் 17.00 மணி வரை நடைபெறும். இந்த நிரல் முற்றிலும் இலவசமானது. மேலும் தொடர்புக்கு ஆ.ரமேஷ் நிலைய அலுவலர், மானாமதுரை +91 90474 04702



# காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் பள்ளியில் மகிழ்முற்றம் நிகழ்ச்சி




காளையார் கோவில், அக்.11-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சேம்பாரில் மகிழ் முற்றம் நிகழ்ச்சி தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. ஒவ்வொரு மாதமும் அணிகளின் செயல்பாடுகளுக்கு வழங்கப்படும் மதிப்பெண் அடிப்படையில் , வெற்றி பெற்ற அணிக்கு ஊக்க பரிசுகள் வழங்கப்படும். செப்டம்பர் மாதத்திற்கான செயல்பாடுகளான மாணவர்கள் வருகை, கற்றல் திறன், மன்ற செயல்பாடுகள், கலைத் திருவிழா போன்றவற்றுக்கு ஒவ்வொரு அணியினருக்கும் தனித்தனியாக மதிப்பெண் வழங்கப்பட்டது. முல்லை அணி முதலிடத்தையும் மருதம் அணி இரண்டாம் இடமும், மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் இடம் முறையே குறிஞ்சி, நெய்தல் ,பாலை அணிகள் பெற்றன. முதலிடம் பெற்ற முல்லை அணிக்கு சுழற் கோப்பையும் ஊக்கப் பரிசு வழங்கப்பட்டது. மேலும் தலைமை ஆசிரியர் சுரேஷ், மகிழ் முற்றத்தின் நோக்கங்களான கற்றல் திறன்களை மேம்படுத்துதல், அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவித்தல், அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புகள் அளித்தல், தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல், மற்றும் ஆசிரியர் மாணவர் உறவுகளை வலுப்படுத்துதல் போன்றவற்றை எடுத்துரைத்தார். செப்டம்பர் மாதத்தில் முதலிடம் பிடித்த முல்லை அணியின் தலைவர் சஸ்மிதா கொடியேற்றி சிறப்புரையாற்றினார். அணியின் தலைவர் அஸ்மிதா மற்றும் துணைத் தலைவர் கனிஷ்கா இருவரும் சுழற் கோப்பையை பெற்றுக் கொண்டனர்.பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் நன்றியுரை கூறினார். ஆசிரியர்கள் முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதிமலர் தனபாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், சத்துணவு பொறுப்பாளர்கள், காலை சிற்றுண்டி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கையில் செயல்பட்டுவரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தையும் மற்றும் உழல் தடுப்பு நீதிமன்றத்தையும் காரைக்குடிக்கு மாறுதல் செய்ய முயற்சிப்பதை நிறுத்தகோரியும் தொடர்ந்து சிவகங்கையில் செயல்பட ஆவண செய்ய வலியுறுத்தியும் சிவகங்கை வழக்கறிஞர் சங்கத்தின் சார்பில் நேற்று சிவகங்கையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாவட்ட செயலாளர் வழ.வே. பாலையா ஒன்றிய செயலாளர்கள் சிவகங்கை வடக்கு கார்த்திக் காளையார்கோவில் வழ.பா.விஜயன் மகளிர் விடுதலைக் கழகம் மாவட்ட அமைப்பாளர் முனைவர் காளிஸ்வரி மூ.ஆதிவளவன் மாவட்ட செய்தித்தொடர்பாளர் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை அரசு மருத்துவ கல்லூரி கூட்டரங்கில் புற்றுநோய் அறுவை சிகிச்சைத்துறையின் சார்பில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் “பிங்க் அக்டோபர் 2025” முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய கையேட்டினை வெளியிட்டார். அரசு இராசாசி மருத்துவ மருத்துவமனை முதல்வர் மரு.அருள் சுந்தரேஷ் குமார் மற்றும் அனைத்துறை அலுவலர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# மழையிலும் வெயிலிலும் நிழற்குடை இல்லாமல் பயணிகள் அவதி



திண்டுக்கல், அக்.11-

மாவட்டம் கொடைக் கானல் சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் பகுதி இங்கு குடியிருப்பு பகுதிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் உள்ளன இவர்களுக்கு பேருந்து நிலையப் பகுதியாக மூஞ்சிகள் பகுதி அமைந்துள்ளது.

இங்கு கடைகள் நடத்தி வரும் வியாபாரிகள் பேருந்து நிறுத்தும் பகுதியை ஆக்கிரமித்து வருகின்றனர் இதனால் நிழல் கூடம் இல்லாமல் பயணிகள் மழை மற்றும் கடும் வெயில் காலங்களில் மிகவும் அவதி அடைகின்றனர் ஆட்சியர் நடவடிக்கை மேற்கொண்டு இப்பகுதியில் நிழற் குடை அமைக்க வேண்டுமென்று சுற்றுலா பயணிகளும் சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களால் கோரிக்கை வைத்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161